1982 பிப்ரவரி 5]

மதுராந்தகம் வட்டத்தில் காகித ஆலை அமைக்கும் திட்டம்.

*வினா எண். 58—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுராந்தகம் வட்டத்தில் காகித ஆலை துவக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

(ஆ) நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா ?

(இ) ஆலை எப்போது முதல் செயல்பட ஆரம்பிக்கும் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) ரூ. 400 இலட்சம் மதிப்பீட்டில் ஆண்டுக்கு 4,500 டன் காகிதம் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு காகித ஆலை நிறுவ சர்க்கரை நிறுவனத்தின் ஆய்வில் உள்ளது.

(ஆ) நில ஆர்ஜிதம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

(இ) 1983 ஆம் ஆண்டு செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த்: சர்க்கரை ஆலை மூலம் காகித ஆலை மதுராந்தகத்தில் நிறுவ அரசு நடவடிக்கை எடுத்திருப்பதற்கு நன்றி தெரிவித்துக் கொள்ளவதோடு, அதே நேரத்தில் எவ்வளவு ஏக்கர் விவசாய நிலங்களை ஆர்ஜிதம் செய்ய அரசு எண்ணியுள்ளது என்பதையும் அவர்களுக்கு மாற்று நிலங்கள் வழங்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: இதற்கு தேவைப் படுகிற மொத்த நிலம் ஐம்பது ஏக்கர். நில ஆர்ஜித வேலை துவங்கியிருக்கிறது. இதில் எவ்வளவு நன்செய் நிலம், எவ்வளவு புன்செய் நிலம் என்ற தகவல் இல்லை. அப்படி நன்செய் நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு அதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், அப்படிச் செய்வதால் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள் என்று அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதற்கான மாற்று ஏற்பாடுகளோ அல்லது உதவி பற்றிய விவரங்களையோ அரசாங்கம் பரிசீலிக்கும்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: எவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கப்படும்! நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட அந்த விவசாயக் குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பில் முன் உரிமை வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: சுமார் 250 பேர்கள் நேரடியாகவும், 150 பேர்கள் மறைமுகமாகவும் வேலை பெற வாய்ப்பிருக்கிறது. நிலம் கொடுத்தவர்கள், அந்தப் பகுதியைச் சார்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன் உரிமை வழங்கப்படும்.